மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.</u>95/2017

2024 ம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தங்கமுத்து | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>22.01.2024 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனது பூமி பெயர் பெரிய பணங்காடு என்றால் சரிதான். எனது பூமிக்கு கிழபுறம் ராமசாமி கவுண்டர் பூமி உள்ளது. எனது பூமிக்கும் ராமசாமி கவுண்டர் பூமிக்கும் தென்புறம் பொதுகிணறு, பொது சாலை உள்ளது என்றால் சரிதான். அது உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அது எனக்கும் ராமசாமி கவுண்டருக்கும் பாத்தியம் என்றால் சரிதான். எனது பங்கின் மேல்புற அத்தில் தென்வடலாக கல்கட்டு உள்ளது என்றால் சரிதான். அந்த கல்கட்டிற்கு மேல்புறமாக தென்வடலாக சர்வே எண். 781/1 ல் வண்டித் தடம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி தடம் எனக்கு தெரிய 50 வருடங்களாக உள்ளது என்றால் சரிதான். அந்த தடத்தை தவிர வேறு தடம் வெட்டுக்குழி காட்டிற்கு இல்லை என்றால் சரியல்ல உள்ளது. அந்த மாற்று தடத்தை

பொய்யேறி என்று சொல்வார்கள். அவ்வாறு மாற்றுத்தடம் உள்ளதாக எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் ஆமாம்.

2. எனது பூமி 781/2 என உட்பிரிவாகிஉள்ளது என்றால் ஆமாம். ராமசாமி காடும் 781/3 என உட்பிரிவு ஆகியுள்ளது என்றால் சரிதான். 2 மற்றும் 3 நெம்பர் காலைகளின் வடபுறம் தான் வெட்டிக்குழி காட்டு தோட்டம் உள்ளது என்றால் சரிதான். அது பாகக்கராரில் பிரதிவாதிகளுக்கு பிரிந்தது என்றால் சரிதான். வெட்டிக்குழி காட்டின் மேல்புற பாகம் 1ம் பிரதிவாதிக்கும், கிழபுற பாகம் 1ம் பிரதிவாயின் சகோதரர் சௌந்தர் ராசுக்கும் பிரிந்தது என்றால் சரிதான். 2, 3 பிரதிவாதிகள் மேற்படி சௌந்தர் ராசின் வாரிசுகள் என்றால் சரிதான். அந்த தடத்தில் சௌந்தர்ராசிற்கும் 1 ம் பிரதிவாதிக்கும் பொது பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதி சென்னையில் வேலையில் உள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது பூமி முதலில் குடிவார இனாம் பூமியாக இருந்தது என்றால் சரிதான். 1970 ல் இனாம் ஒழிப்பு நடவடிக்கையில் எனக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

3. அதற்கு பின்னிட்டு 1986 ல் தான் ரீ சர்வே செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது செய்யப்பட்டிருக்கலாம். ரீ.ச.எண். 781/2 பூமிக்கு எனக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். பொது கிணறு உள்ள பூமியின் உட்பிரிவு 781/4 என்றால் சரிதான். அதன் கிழபுறத்து பங்கு சுப்பிரமணிய சுவாமி என்பவருக்கு பாத்தியப்பட்டதாக சொல்கிறார்கள் அது பற்றி எனக்கு தெரியாது. ரீ.சர்வே பட்டா வழங்கி 30 ஆண்டுகளுக்கு மேலாக உள்ளது என்றால் சரிதான். ரீ.சர்வே பட்டா குறித்து நான் ஆட்சேபித்து மனு ஏதேனும்

கொடுத்தேனா என்றால் இல்லை. தாவா தடம் பொறுத்து அம்பிகை தாஸ மக்கள் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தடபாத்தியம் குறித்து இதுவரை நான் ஆட்சேபனை எதுவும் தெரிவித்தேனா என்றால் இல்லை. கடந்த 30 ஆண்டுகாள எனது பூமிக்கு நான் கந்தாயம் செலுத்தி வருகிறேன் என்றால் ஆமாம்.

4. ரீ.சர்வே பட்டா சட்டப்படி செல்லாது என இந்த வழக்கில் நான் பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. எனது தோட்ட பாகத்தை நான் தற்போது அளந்து பார்த்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையரை அழைத்துச் சென்று தாவா சொத்தை காட்டினேனா என்றால் இல்லை. பிரதிவாதிகள் என்னை இடையூறு செய்யவில்லை என்றால் சரியல்ல. என்ன இடையூறு செய்தார்கள் என்றால் ஆட்களை அழைத்து வந்து அளக்க மயற்சி செய்து என்னிடம் தகராறு செய்தார்கள். இது சம்மந்தமாக எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் பிரதிவாதிகள் எனக்கு எந்த இடையூறு செய்யவில்லை என்பதால் தான் வழக்குரையில் அது பற்றி சொல்லவில்லை என்றால் சரியல்ல. தடப்பகுதி அன்று இருந்த நிலையில் தான் இன்றும் இருக்கிறது என்றால் சரிதான் அத்து இல்லாமல் பொதுவாக உள்ளது.

5. தடப்பகுதி கல்கட்டிற்கு மேல்பகுதியில் உள்ளது என்றால் சரிதான். தடப்பகுதியான சர்வே எண். 781/1க்கு எனது பெயரில் பட்டா இல்லை என்றால் சரிதான். 4, 5 பிரதிவாதிகள் தாவா பூமியை அளவிட வந்தார்கள் அது சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார்

கொடுத்தேனா என்றால் புகார் கொடுத்தேன் அதை பெற்றக்கொள்ளாமல் நீதிமன்றம் சென்று பார்த்துக்கொள்ள சொன்னார்கள். நான் காவல் நிலையத்தில் கொடுத்த மனுவின் அடிப்படையில் தான் வட்டாட்சியர் தாவா சொத்தை அளக்கவந்தார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்து அளவீடு செய்து அது எனக்கு விரோதமாக இருந்ததால் நான் இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த தாவாவிற்கு எந்த வழக்கு மூலமும் இல்லை என்றும், நான் வழக்கில் சொல்லியுள்ள வழக்கு மூலம் தவறானது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடியாக தக்கது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

ஒம்/–திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்